# 17 வட்டமாக இருந்து கதை சொல்லுதல்

**இலக்கு**

*கதை சொல்லும் வட்டம் பள்ளித் தொடர்பாடலின் எளிமையான, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வடிவமாகும்: மாணவர்கள் வட்டமாக அமர்ந்து (எ.கா.: பாடம் தொடங்க முன்) கடைசியாக நடைபெற்ற கூட்டத்தின் பின் அவர்கள் பட்டறிவுற்றவற்றை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்வர். இதனூடாக அவர்கள் கட்டற்ற பேச்சு, நிகழ்வுகளைக் கால வரிசையில் கூறுதல், கேட்டு விளங்குதல் ஆகியனவற்றைப் பழகுவர்.*

மழலையர் - தரம் 9 | 15 மணித்துளிகள்



**நடைமுறை:**

- பாடத்தைத் தொடங்க, ஆசிரியர் மாணவர்களை (அல்லது ஒரு குறிப்பிட்ட நிலையிலுள்ள மாணவரை மட்டும்) வட்டமாக இருக்கச் சொல்வார். மாணவர்கள் சடங்குவயப்பட்ட கதைசொல்லும் வட்டத்துடன் பழக்கமுடையவர்கள், அதனுடன் அடுத்த 15 மணித்துளிகளுக்குத் தம்முடைய முதல் கூட்டத்திலிருந்து பெற்ற பட்டறிவுகளை விளக்கப்போகிறார்கள் என்பதையும் அறிவர். ஆசிரியரும் தான் பட்டறிந்தவற்றையும் எவை தன்னைக் குழப்பமடையச் செய்கின்றன என்பதையும் சொல்லுவார்.
- ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்ட கலந்துரையாடல் விதிகள் (பார்க்கவும் #9), உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும். தலைமைத்துவச் செயற்பாட்டினையும் மாணவனே / மாணவியே, முன்னர் இவ்வாறு பழக்கப்பட்டிருந்தால் (பார்க்கவும் #14 உம் 15 உம்), ஏற்றுக்கொள்ளலாம்.
- பின்வரும் விதிகள் கேட்டு விளங்கிக்கொள்ளலைப் பயிற்சிப்பதற்கு பயனுள்ளனவாக அமைந்தன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது: பேசுகின்ற பிள்ளையிடம் மாணவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்பர். பின்னர், அடுத்த மாணவி / மாணவன் தன்னுடைய பட்டறிவுகள் பற்றிச் சொல்லுவார்.

**மாற்றுவழி:**

- வகுப்புத் தொடக்கத்துக்கு மாறாக ஒரு பாட அலகின் முடிவில் வட்டமாக இருந்து கதை சொல்லலாம்.
- மாணவர்களுக்கு வேறு ஏதாவது ஒரு நிகழ்வு இருப்பின், வட்டமாக இருந்து கதை சொல்லுதலை ஏதாவது ஒரு பொருள் பற்றிய கலந்துரையாடலுக்குப் பயன்படுத்தலாம், நேரத்தை வேண்டிய அளவுக்கு நீட்டிக்கொள்ளலாம்.



**குறிப்புகள்:**

- உரையாடலில் தான் பங்குபற்றுவதோ இல்லையோ என்பது பற்றி ஒவ்வொரு மாணவரும் தீர்மானிப்பார். எனினும், எல்லாப் பிள்ளைகளும் பங்குபற்றுவதை ஆசிரியர் உறுதிப்படுத்தவேண்டும்.
- பொதுவாக, பிள்ளைகள் கதை சொல்லும்போது மிக விரிவாகக் கூறவே விரும்புவர். ஆசிரியர் அல்லது மாணவ நடுவர், மாணவர் எவரும் காலக்கெடுவை மீறாமையையும் எல்லோருக்கும் சொல்லுதற்கு வாய்ப்பு வழங்குதலையும் உறுதிப்படுத்த வேண்டும். மணல் கடிகாரம் காலக்கெடுவினைச் செயற்படுத்த உதவக்கூடியது. மணல் கடிகார கண்ணாடியில் மணல் கீழே இறங்கிவிட்டால் (2 அல்லது 3 மணித்துளிகள்) அது பேச்சாளருடைய நேரம் முடிந்துவிட்டதைக் குறிக்கும்.